செ.வெ.எண்.01 நாள்: 01.02.2021

# தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 2019ம் ஆண்டு கொடிநாள் நிதி வசூலில் 100 சதவீதத்திற்கு மேல் வசூல் செய்து சாதனை புரிந்த 18 அலுவலர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார். மேலும் சிறந்த சமூக சேவகர்கள் 3 நபர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார்

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (01.02.2021) நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடம் மனுக்களை பெற்றுக்கொண்டார். மேலும், 2019ம் ஆண்டு கொடிநாள் நிதி வசூலில் 100 சதவீதத்திற்கு மேல் வசூல் செய்து சாதனை புரிந்த 18 அலுவலர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார். மேலும் சிறந்த சமூக சேவகர்கள் 3 நபர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

கொரோனா தொற்று காரணமாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் கூட்டம் நடத்தப்படாமல இருந்தது. தூத்துக்குடி மாவட்டத்தில் மக்களிடம் நேரடியாக மனுக்களை பெறும் நிகழ்ச்சி நடத்தாமல் காணொலி மூலம் வட்டாட்சியர் அலுவலகம் மூலமாக மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்பட்டு வந்தது. இன்று முதல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி நேரடியாக மக்களிடம் மனுக்கள் பெறும் நிகழ்வு தொடங்கப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் கொடிநாள் நிதி வசூலில் தனது தங்களது துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இலக்கினை 100 சதவீதம் முழுமையாக வசூல் புரிந்தும், இலக்கினை வட கூடுதலாக வசூல் செய்தமைக்கும் 18 அலுவலர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கப்படுகிறது. மக்கள் குறைதீர்க்கும் கூட்டத்திற்கு வரும் பொதுமக்கள் சமூக இடைவெளியை கடைபிடிக்கவும், முககவசம் அணிந்து கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு மனுக்கள் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் தொடர்ந்து வாரம்தோறும் திங்கட்கிழமை மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறும் என தெரிவித்தார்.

கூட்டத்தில் கூடுதல் ஆட்சியர் (வருவாய்) திரு.விஷ்ணுசந்திரன், இ.ஆ.ப., சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி.தமிழரசி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.ஞானகௌரி, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.அபுல்காசிம், உதவி இயக்குநர் (முன்னாள் படைவீரர் நலன்) திரு.நாகராஜ், திருநெல்வேலி மண்டலம் உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திரு.குற்றாலம், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திருமதி.பரிமளா மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.